# ஸ்ரீ சாய்ராம் கல்லூரியில் 2வது பட்டமளிப்பு விழா




■ தாம்பரம் ஸ்ரீசாய்ராம் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில், முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் ஆலோசகர் பொன்ராஜ் கலந்து கொண்டு, மாணவர்களுக்கு பட்டமளித்தார்.

சென்னை, ஏப். 25-

மேற்கு தாம்பரம், ஸ்ரீ சாய்ராம் தொழில்நுட்ப கல்லூரியில், இரண்டாம் ஆண்டு பட்டமளிப்பு விழா நடந்தது.

சாய்ராம் திறந்தவெளி அரங்கில் நடந்த இந்த விழாவில், முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் ஆலோசகர் பொன்ராஜ், சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, மாணவ, மாணவியருக்கு பட்டங்களை வழங்கினார்.

அவர் பேசுகையில், ''நான் வெற்றி பெறுவேன்; வெற்றி பெற்றாக வேண்டும் என்பது, உங்களின் தாரக மந்திரமாக இருக்க வேண்டும். அந்த தாரக மந்திரம், உங்களை உறங்கவே விடாது; உசுப்பிவிட்டுக் கொண்டே இருக்கும்,'' என்றார்.

விழாவில், கல்லூரி தலைவர் அரிமா லியோ முத்து, முதன்மை நிர்வாக அதிகாரி சாய் பிரகாஷ் லியோ முத்து, கல்லூரி முதல்வர் பழனிகுமார், செயலர் வாசு, அறங்காவலர் சர்மிளா ராஜா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

Dinamalar. 25/04/13